# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

## 2020



**ප්‍රජා පාදක විශෝධන දෙපාර්තමේන්තුව**

*சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்*

**Department of Community Based Corrections**

# ஆணையாளரின் கூற்று



சிறைச்சாலைகளில் உள்ள சன நெருக்கடியை குறைப்பதை முக்கிய நோக்கமாக கொண்டு சிறு தவறுகளுக்காக சிறைச்சாலை செல்வதை தவிர்த்து, அவர்களை சமூகத்தில் வைத்தே சீர்திருத்தம் செய்வதோடு, தவறுகளில் இருந்து விடுவித்து, சிறந்த பிரசைகளாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தின் கீழ் இத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த 2020 ஆம் ஆண்டு சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாட்டுக்காக கட்டளையாளர்கள் 8961 பேர் நீதி மன்றங்கள் மூலம் கிடைக்கப்பெற்றனர்.

உலகளாவியரீதியில் ஏற்பட்ட கொரோனா கொவிட் 19 பெருந் தொற்று காரணமாக 2020 ஆம் ஆண்டு 06 மாத காலங்களே சிறந்த முறையில் காரியாலயங்களில் சேவை புரியக் கிடைத்தது. இவ்வாறான சிக்கல்கள் நிறைந்த காலங்களிலும் கூட எங்களுக்கு நீதிமன்றங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற கட்டளையாளர்களை ஒர் ஒழுங்கு முறையில் கண்காணிக்க முடியாமல் போனது. எனினும் சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்கள உத்தியோகத்தர்களின் சிறந்த வினைத்திறனான செயற்பாடு காரணமாக சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை மீறல்களை கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடிந்தது.

இந்த பெருந் தொற்று காலங்களிலும் திணைக்களத்தின் எதிர்கால முன்னேற்ற திட்டங்களை வெற்றிகரமான செயல்படுத்த சில தேவையான அத்தியவசிய முன்னெடுப்புக்களை மேற்கொள்ள திணைக்களத்திற்கு முடிந்தது.

- போதைப் பொருட்களுக்கு அடிமையான கட்டளையாளர்களை சீர்திருத்தம் செய்வதற்காக சீர்திருத்த மத்திய நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு தேவையான காணியை ஹொரன பகுதியில் கொள்வனவு செய்வதறகான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாடுகளை மென் மேலும் விரிவு படுத்தி, நாட்டில் நீதியை சரியான முறையில் நிலைநாட்டுவதற்காக சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தில் உள்ள சட்ட சிக்கல்களை சீர்செய்வதற்காக பாரளுமன்ற கெபினட் அனுமதியை பெற்றுள்ளோம்.

- சிறைச்சாலை சன நெருக்கடியை குறைப்பதற்கும், போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை சீர்திருத்தம் செய்வதற்கும் சிறந்த நிறுவனம் சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் ஆகும். இதன் ஊடாக மற்றைய நிறுவனங்களின் அவதானத்தை வென்றுள்ளோம்.



ஆர்.பீ.எஸ் சமன் குமாரி
ஆணையாளர்
சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்

2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்

செலவீனத் தலைப்பு இலக்கம் 326

<u>உள்ளடக்கம்</u>


அத்தியாயம் 01 - நிறவனத்தின் விபரம்

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனித வள விபரம்

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை

**உள்ளடக்கம்**

அத்தியாயம் 01 - நிறவனத்தின் விபரம் .......... 5

1.1 தெளிவுபடுத்தல .......... 5

1.2 திணைக்களத்தின் நோக்கம் மற்றும் பணிக் கூற்று.......... 6

1.3 பிரதான கடமைகள் .......... 6

1.4 நிர்வாக கட்டமைப்பு .......... 7

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் .......... 8

2.1 செயற்திறன் அறிக்கை .......... 8

2.2 பெற்றுக்கொண்ட கட்டளையாளர்களின் விபரம .......... 8

2.3 அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம .......... 10

2.4 இலக்கு.......... 13

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை .......... 15

3.1 2020 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று .......... 15

3.3 நிதி நிலைமைக் கூற்று .......... 16

3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் .......... 18

3.6 வருமான அறவீட்டு முன்னேற்றம் .......... 19

3.7 ஒதுக்கீட்டு பயன்பாட்டு செயன்முறை (ரூபா.000) .......... 19

3.8 நி.கூ208ன் படி மற்றொரு அமைச்சின் ∴ திணைக்களத்தின் முகவராக இத் திணைக்களத்திற்கு ஒதுக்கீடு வழுங்கப்பட்டது .......... 20

3.9 நிதி அல்லாத சொத்துக்களின் முன்னேற்ற அறிக்கை .......... 20

3.10 கணக்காய்வாளர நாயத்தி அறிக்கையி .......... 21

4.1 நிறுவன செயற்திறன் குறிகாட்டிகள் (செயற்திட்டத்திற்கமைய) .......... 26

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபு) அடையும் செயலாற்றுகை .......... 27

5. நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கினை அடைவதற்கான செயற்திறன் .......... 27

5.1 அடையாளம் காணப்பட்ட அந்தந்த நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்கினை குறிப்பிடல் இலக்கு 3 : நல்லாரோக்கியம் மற்றும் நல்வாழ்வு .......... 27

அத்தியாயம் 06 - மனித வள விபரம் .......... 28

6.1 முகாமைத்துவ கட்டமைப்பு .......... 28

6.2 அலுவலக உத்தியோகத்தர்கள் (2020.01.01-2020.12.31).......... 28

6.3 மனித வள அபிவிருத்தி .......... 31

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை .......... 33

## அத்தியாயம் 01 - நிறவனத்தின் விபரம்

### 1.1 தெளிவுபடுத்தல

1999 வருடத்தின் நீதி அமைச்சின் கீழ் ஒரு செயற்திட்டமாக இலங்கையில் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் ஆரம்பிக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க,சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தின் மூலம் 3 நீதிமன்றங்களில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் 2008 ஆம் ஆண்டு திணைக்களமாக தரம் உயர்த்தப்பட்டது. இது வரை நீதிவான் நீதிமன்றம் மற்றும் சுற்றுலா நீதிமன்றம் அடங்களாக 125 நீதிமன்றங்களில் சமுதாயஞ்சார் சீர்திருத்தம் இயங்கி வருகின்றது. நீதிமன்றங்களில் உள்ள சமுதாயஞ்சார் சீர்திருத்த காரியாலயங்களில் பல்வேறு சீர்திருத்த நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. சிறு குற்றங்கள் புரிபவர்களை சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துவதன் மூலம் சிறு குற்றங்களை புரியும் தவறாளர் ஒருவர் சிறைச்சாலை செல்வதை தடுப்பதோடு, சிறைச்சாலைகளில் உள்ள சன நெருக்கடியை குறைக்கவும் முடியும். இதனால் அரசுக்கு ஏற்படும் செலவுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. மற்றும் அவர்கள் சிறைச்சாலைகளில் உள்ள பாரிய குற்றவாளிகளுடன் தொடர்பு கொள்வதால் பெரும் தவறுகள் செய்வதற்கு வாய்ப்பாக அமையும். எனவே அவர்களை குற்ற செயல்களில் ஈடுபடாமல் தடுப்பதற்கு புனர்வாழ்வு நிகழ்ச்சிகளுக்கு உட்படுத்த வேண்டிவரும்.

நீதிமன்றங்கள் மூலம் சிறு குற்றங்கள் புரிபவர்களுக்கு சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உட்படுத்துவதன் மூலம் எதிர்பார்ப்பது நாட்டில் குற்றச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரை அதில் இருந்து விடுபடச் செய்து, நாட்டிற்கு பிரயோசனம் உள்ள பிரசையாக மாற்ற தேவையான முயற்சிகளை மேற்கொள்வதாகும்.

இதற்காக நீதிவான் நீதிமன்றங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்தின் பிராந்திய காரியாலயங்களில் இணைக்கப்பட்டுள்ள சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்கள் மூலம் பல்வேறு சீர்திருத்த நிகழ்ச்சிகள் செயற்படுத்துகின்றன. சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்கள உத்தியோகத்தர்களின் கண்காணிப்பில் கீழ் இருக்கும் கட்டளையாளர்களை சரியான பாதையில் கொண்டு செல்வதே திணைக்களத்தின் நோக்கமாகும்.

சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையை நிறைவு செய்த நபர்களின் பின்னூட்டல் செயற்பாட்டை மேற்கொள்வது சமகாலத்தில் முக்கியமான ஒரு விடயமாகும். ஆதலால் இவ் விடயமாக அவதானத்தை செலுத்திய திணைக்களம் முன்னதை விடவும் விரிவாகவும் விரைவாகவும் இச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. அதற்கமைய நாட்டிலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் சமுதாயஞ்சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களை எமது திணைக்களம் இணைப்பு செய்துள்ளது.

## 1.2 திணைக்களத்தின் நோக்கம் மற்றும் பணிக் கூற்று

**நோக்கு**

சிறுதவறாளர்கள் மற்றும் தவறுகளுக்கு தூண்டப்படும் நபர்களை சிறந்த பிரசைகளாக உருவாக்குதல்

**பணிக்கூற்று**

பின்னூட்டலுடன் கூடிய வினைத்திறனான சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாட்டின் ஊடாக சிறுதவறாளர்கள் தவறுகளுக்கு தூண்டப்படும் நபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை பொருளாதார சமூக மற்றும் ஆன்மீக ரீதியில் அபிவிருத்தி செய்தல்

**நோக்கு**

**1. 1999** ஆம் ஆண்டின் **46** ஆம் இலக்க, சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் சிறு குற்றங்களை புரியும் தவறாளர் சிறைச்சாலை செல்வதால் சிறைச்சாலையில் ஏற்படும் சன நெருக்கடியை குறைத்தல்.

**2.** சிறு தவறுகளுக்கு குற்றவாளியாக கருதப்படும் ஒருவரை மீண்டும் தவறுகள் செய்யாத சிறந்த பிரசையாக மாற்றுதல்.

3. இந்த நபர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான விடயங்களை செயல்படுத்தல்.

4. இக் கட்டளையாளர்களின் குடும்பம் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் சமூக, கலாசார, பொருளதார விடயங்கள் மற்றும் சுகாதார விடயங்களை மேம்படுத்துவதற்காக செயற்படல்.

5. மது மற்றும் போதை வஸ்துகளுக்கு அடிமையான கட்டளையாளர்களை அதில் இருந்து விடுபடச் செய்வதோடு, சமூகத்தில் இருக்கும் மது மற்றும் போதை வஸ்துகளை குறைப்பதற்கு உதவி செய்தல்.

6. தேசத்தின் பொருளாதாரத்தை வழுப்படுத்துவதற்கு தேவையான திடகாத்திடமான நபர்களை உருவாக்கி, அவர்களின் உழைப்பை தேசத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தல்.

1.3 பிரதான கடமைகள்

1. நீதிமன்றங்கள் மூலம் சிறு தவறுகளுக்கு தவறாளராக கருதப்படும் ஒர் நபரை சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்குள் உள்வாங்கல்.

2. கட்டளையாளர்களின் ஆன்மீக வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக அதிகமான ஆன்மீக நிகழ்ச்சிகளை தயாரித்து நடாத்துதல்

3. கட்டளையாளர்களின் உளவளத்திற்காக மற்றும் சுகாதார மேம்பாட்டிற்காகவும் உளவள ஆலோசனை நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

4. கட்டளையாளர்களின் விசேட திறன்களை கண்டறிந்து அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற சிறந்த தொழில் பயிற்சிகளை வழங்குதல்.

5. கட்டளையாளர்களின் பொருளாதாரத்தை முன்னேற்ற பல்வேறு வகையான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தல்.

6. கட்டளையாளர்கள் போதைப் பொருட் பாவணையில் இருந்து விடுபட மருத்துவ சிகிச்சைக்காக அனுப்புதல்.

7. ஆளுமை வளர்ச்சிக்காக அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

1.4 நிர்வாக கட்டமைப்பு



## அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 செயற்திறன் அறிக்கை

இதனடிப்படையில் நீதிமன்றங்களின் மூலம் 2020.01.01 திகதி முதல் 2020.12.31 திகதி வரை பெறப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் விபரம் மாகாண அடிப்படையில

2.2 பெற்றுக்கொண்ட கட்டளையாளர்களின் விபரம

| **மாகாணம்** | **கட்டளைக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| மேல் மாகாணம் | 4083 |
| மத்திய மாகாணம் | 797 |
| ஊவா மாகாணம் | 546 |
| தென் மாகாணம் | 1255 |
| சப்ரகமுவ மாகாணம் | 789 |
| கிழக்கு மாகாணம் | 498 |
| வட மேல் மாகாணம் | 269 |
| வட மத்திய மாகாணம் | 223 |
| வட மாகாணம் | 501 |
| **மொத்தம்** | **8961** |

இதனடிப்படையில் நீதிமன்றங்களின் மூலம் 2020.01.01 திகதி முதல் 2020.12.31 திகதி வரை பெறப்பட்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களின் தவறுகளின் விபரம் மாகாண அடிப்படையில்

குற்றங்கள்

| **குற்றங்கள்** | **கட்டளைக்கு உட்பட்டவர்களின் தொகை** |
|---|---|
| போதை பொருள் ஹெரோயின் | 3127 |
| கஞ்சா | 1278 |
| சட்ட விரோத மதுபானம் | 2540 |
| பொது இடங்களில் அனாகரிகமாக நடந்து கொள்ளல் | 326 |

| | |
|---|---|
| களவெடுத்தல் | 32 |
| ஏமாற்றுதல் | 0 |
| தடை செய்யப்பட்ட ஆயுதத்தை தன்வசம் வைத்திருந்தமை | 5 |
| களவாடப் பட்ட பொருட்களை தன் வசம் வைத்திருத்தல் | 0 |
| சூது | 256 |
| பொது மக்களுக்கு இடைஞ்சல் விளைத்தமை | 39 |
| இதர | 1358 |
| **மொத்தம்** | **8961** |

சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையின் விபரங்கள் (2020.01.01 முதல் 2020.12.31 வரை )

| கிடைக்கப் பெற்ற கட்டளையாளர்களின் எண்ணிக்கை | நிறைவு செய்த கட்டளையாளர் களின் எண்ணிக்கை | | கட்டளை மீறப்பட்டவர்களின் எண்ணிக்கை 2019 ஆண்டின் கட்டளை மீறப்பட்டவர்களின் எண்ணிக்கை உள்ளடக்கம் | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | வீதம் | எண்ணிக்கை | வீதம் |
| 8961 | 3574** | 39.8 % | 1528 | 17.0 % |

** இதர கட்டளைகள் மேலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறன.

- நடாத்தப்பட்ட சீர்திருத்த நிகழ்ச்சிகளின் விபரம் ( 2020.01.01 முதல் 2020.12.31 வரை )

| **நிகழ்ச்சிகள்** | **எண்ணிக்கை** | **நபர்களின் எண்ணக்கை** |
|---|---|---|
| உளவள ஆலோசனை | 610 | 3485 |
| சிரமதானம் | 174 | 1577 |
| ஆன்மீகம் | 83 | 971 |
| போதை வஸ்து ஒழிப்பு | 32 | 270 |
| தொழில் பயிற்சி | 7 | 108 |
| தெளிவுபடுத்தல் நிகழ்ச்சிகள் | 24 | 391 |
| விசேட தின நிகழ்ச்சிகள் | 04 | 32 |
| மொத்தம் | 946 | 6834 |

- 2020 வருடத்தில் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடை பயன்படுத்தி கட்டளையாளர்களுக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் விபரம்

| **நிகழ்ச்சிகள்** | ரூபா |
|---|---|
| 50 | 776169.00 |

- சிறப்பாக சீர்திருத்தம் செய்த கட்டளையாளர்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியில் வலுப்படுத்தல்

குடும்ப அபிவிருத்தி திட்டத்தின் அடிப்படையில் சுய தொழில் ஊக்குவிப்புக் தொகை (விசேட செயற்திட்டம் செயற்படுத்தப்படாத பகுதிகளில்) ரூபா 25000.00 உள்ளே அமையுமாறு கட்டளையாளர் 09 பேருக்கு ரூபா 220000.00 பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

| குடும்ப அபிவிருத்தி திட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | செலவு ரூபா |
|---|---|
| 09 | 220000.00 |

2.3 அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் (2020.01.01 திகதி முதல் 2020.12.31 வரை

போதை வஸ்துகளுக்கு அடிமையான சமுதாயஞ்சார் சிர்திருத்த கட்டளையாளர்களை சீர்திருத்தம் செய்யும் விசேட செயற்திட்டம்

போதைப் பொருட்களுக்கு அடிமையான கட்டளையாளர்களை சீர்திருத்தம் செய்வதற்கு விசேட செயற்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதற்கமைய வடமேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம் மற்றும் மேல் மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. இதனடிப்படையல் நீதிவான் நீதிமன்றங்களினால் கிடைக்கப்பெற்ற கட்டளையாளர்களில் 2165 பேர் ( கஞ்சா,ஹெரோயின் மற்றும் சட்ட விரோத மதுபானம் ) போன்றவற்றை பாவிப்பவர்கள். இவர்கள் விசேட சீர்திருத்த நிகழ்ச்சிக்குள் உள்வாங்கப்பட்டனர். இவ் செயற்திட்டத்திற்கு உள்வாங்கப்படும் கட்டளையாளர்களை விசேட உளவள ஆலோசனை வழங்கப்பட்டதன் பின்னர் மருத்துவ சிகிச்சைக்கு உள்வாங்கப்படுவர். இவ்வாறு மருத்துவ சிகிச்சைக்கு உள்வாங்கப்படுபவர்கள், வைத்தியரின் ஆலோசனைகளுக்கு அமைய நிரந்தர சிகிச்சை அல்லது பகுதி நேர சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவர். இவ்வாறு மருத்துவ சிகிச்சை முடிவுற்றதன் பிற்பாடு போதை வஸ்து பாவனையில் இருந்து விடுபட்டு சிறந்த பிரசையாக தமது வீட்டுக்கு போகும் போது வீட்டில் இருக்கும் உறவினர்கள் அவர்களை ஏற்றுக்கொள்ள வைப்பதும்

அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த குடும்பததில் உள்ள மற்றைய உறுப்பினர்களின் உதவி ஒத்தாசையை பெற்றுக் கொள்வது எவ்வாறு என்றும் தெளிவுபடுத்தலும், அவர்களுக்கு நல்ல ஆலோசனை வழங்குவதும் சமுதாயஞ்சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரதான பணியாகும். சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாட்டினால் சிறந்த முறையில் சிர்திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர், நிரந்தர தொழில் அற்ற கட்டளையாளர்களுக்கு நிரந்தர தொழில் ஒன்றை செய்வதற்கான வழிமுறைகளை செய்து கொடுத்தல் மற்றும் அவர்களுக்கு தேவையான தொழிற் பயிற்சியையும் பெற்றுக்கொடுப்பதும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பணியாகும். அத்தோடு சுயமாக தொழில் செய்ய விரும்புபவர்களுக்கு தேவையான சுய தொழில் ஊக்குவிப்பு தொகைகளை வழங்கி தொழில் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தல். குறைந்த பட்சம் ஒரு கட்டளையாளருக்கு ரூபா 50000.00 அமையும்மாறு பணமாகவோ அல்லது அந்த தொழிலை செய்வதற்கு தேவையான பொருட்களை வாங்கிகொடுத்தல். அதனடிப்படையில் 2020 ஆம் ஆண்டு இவ்வாறான சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்கள் 23 பேருக்கு சுய தொழில் ஆரம்பம் செய்வதற்கு ரூபா 855950.00 பணத் தொகையை சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் கட்டளையாளர்களுக்கு வழங்கியுள்ளது.

| செயற்திட்டத்தின் பெயர் | வீதம் மற்றும் அளவு ரூபா | செலவு செய்யப்பட்ட விடயம் | செலவு ரூபா | பண வீக்கம் | மற்றைய முன்னேற்றங்கள் | | | சுய தொழில் ஆரம்பம் செய்வதற்கு ஊக்குவிப்பு பண தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மாகாணம் | போதை வஸ்துக்கு அடிமையான கட்டளை யாளர்களின் எண்ணிக்கை | சிறந்த சீர்திருத்தம் செய்த கட்டளை யாளர்களின் எண்ணிக்கை | வீதம் | எண்ணிக்கை | பெற்றுக்கொடுத்த பண தொகை |
| போதை வஸ்து தொடர்பான தவறாளர்களான சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளை யாளர்களை சீர்திருத்தம் செய்யும் செயற்திட்டம் ( மேல், வட மேல், சப்ரகமுவ, தெண் மாகணங்களில்) | 2.62 | உத்தியோகத்தர்களின் ஆளுமை விருத்தி மற்றும் குடும்ப அபிவிருத்தி நிகழ்ச்சி களை நடாத்தல் | 1.23 | 47 % | வட மேல் | 234 | 60 | 57.1 | 08 | 231900.00 |
| | | | | | தென் | 581 | 107 | 48.0 | 01 | 44000.00 |
| | | | | | சப்ரகமுவ | 469 | 82 | 56.2 | 02 | 95000.00 |
| | | | | | மேல் | 881 | 59 | 38.8 | 12 | 485050.00 |
| | | | | | மொத்தம் | 2165 | 308 | 49.2 | 23 | 855950.00 |

2.4 இலக்கு

01. சிறு தவறுகளுக்கு தவறாளராக கருதப்படும் ஒருவர் சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளைக்கு உள்வாங்குதல் மற்றும் கட்டளையாளர்களை அதிகரித்துக் கொள்வதற்காக வெற்றிகரமான சீர்திருத்த செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

02. உத்தியோகத்தர்களின் ஆளுமை அபிவிருத்தியை அதிகரித்தல்

- ♣ குறுகிய கால போதை ஒழிப்பு தொடர்பான பயிற்சிகளை வழங்குதல்
- ♣ சிரேஸ்ட சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் மற்றும் சமுதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர்களுக்கு சமுதாயஞ்சார் சீர்திருத்தம் தொடர்பான முதுகலை மாணி பட்டப் படிப்பை வழங்குதல்.
- ♣ அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக உள வள ஆலோசனை தொடர்பான டிப்ளோமா பாடநெறியை தொடர்ந்தும் வழங்கிக் கொண்டிருத்தல்.
- ♣ சகல உத்தியோகத்தர்களுக்கும் கணணி கற்கை நெறியை பூர்த்தியாக பெற்றுக் கொடுத்தல்.
- ♣ சமுதாயஞ்சார் சீர்திருத்தம் மற்றும் அது தொடர்புடைய ஏனைய விடயங்களுக்காக வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்குதல்.

03. மருத்துவ சிகிச்சை முறையை தரப்படுத்தல்

- ♣ முழு தீவையையும் உள்ளடக்கும் விதமாக மருத்துவ சிகிச்சை முகாம்களை அமைத்தல். (சுகாதார அமைச்சின் கீழ் )
- ♣ மது மற்றும் போதை வஸ்துகளுக்கு அடிமையான கட்டளையாளர்களின் தாக்கத்தை அறிந்து கொள்ள விஞ்ஞானரீதியில் பரிசோதனைகளை மேற்கொண்டு போதையின் அளவை கண்டு கொள்ளல்.

04. சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களத்திற்கு சொந்தமான சீர்திருத்த நிலையத்தை கட்டி முடித்தல். ( ஹொரன பகுதியில் )

05. சிறந்த முறையில் சீர்திருத்தம் செய்த சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களை சிறந்த விவசாயிகளாக மாற்றுதல்.

06. சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாட்டை மக்கள் மயப்படுத்துவதற்காக தெளிவு படுத்தல்களை அதிகப்படுத்தல்.

07. கட்டளையாளர்களின் தகவல்களை முகாமைத்துவம் செய்ய தேவையான தகவல் களஞ்சிய உருவாக்கல்

- ♣ சமுதாயஞ்சார் சீர்திருத்த வலைதளத்தை மீள் சீர்செய்தல்.
- ♣ சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களின் தகவல்களை சரியாக முகாமைப்படுத்தல்.

08. சமுதாயஞ்சார் சீர்திருத்த சட்டத்தில் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொண்டு சமுதாயஞ்சார் சீர்திருத்த செயற்பாட்டை மேலும் விரிவுபடுத்துவதற்காக (சிறைவாசம் அனுபவித்து விடுதலையாகும் கைதிகள் சமூகமயப்படுத்தல்)(அவதான மட்டம் மற்றும் தேவைக்கேற்ப) திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்தல் மற்றும் அவதானத்தை செலுத்துதல்.

09. கட்டளையாளர்களின் அதிகமானவர்கள் மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள். எனவே இவர்களுக்கே உரிய சிகிச்சை முறையின் மூலம் (சாட்சி அடிப்படையில்) இவர்களை சீர்திருத்தம் செய்தல். இச் செயற்றிட்டம் 2021 ஆண்டு முதல் தீவு முழுவதும் செயற்படுத்தல்.

10. அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக சமுதாயஞ்சார் சீர்திருத்த கட்டளையாளர்களின் பின்னுாட்டல் செயற்பாட்டை மென் மேலும் விரிவுபடுத்தல்.

11. போதைக்கு அடிமையான சிறு தவறாளர்களை தவறுகளில் இருந்து மீட்டு சிறந்த பிரசையாக மாற்றி அவர்களை பொருளாதார ரீதியில் வலுவடையச் செய்ய அபிவிருத்தி திட்டத்தை தொடர்ந்தும் செயற்படுத்துதல். அவ்வாறு சீர்திருத்தம் அடைந்த கட்டளையாளர்களுக்கு தவணை முறையில் செலுத்துவதற்காக அரச வங்கிகள் ஊடாக கடன் வசதிகளை செய்து கொடுத்தல்.

# அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 2020 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | (ரூபா) | ஏசீஏ- எப |
| பாதீட்டு 2020 | | குறிப்பு | உண்மை நிலை | | |
| | | | 2020 | 2019 | |
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானம் பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 306,840,000 | 284,669,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 172,289 | 196,529 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 7,613,363 | 11,345,296 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பெறுகைகள் | | 13,766,773 | 11,941,696 | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **328,392,425** | **308,152,522** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **328,392,425** | **308,152,522** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | | |
| 280,382,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 274,961,169 | 245,217,841 | |
| 39,405,000.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 31,415,997 | 33,120,947 | ஏசீஏ2(ii) |
| 2,807,000.00 | மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள் | 7 | 2,749,365 | 2,789,267 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| 50,000.00 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| 322,644,000.00 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | | **309,126,531** | **281,128,056** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 4,612,000.00 | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 2,393,323 | 2,037,619 | |
| 3,617,000.00 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 3,611,189 | 4,651,743 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 3,017,000.00 | மனித வள அபிவிருத்தி | 14 | 3,000,745 | 4,591,451 | |
| 2,620,000.00 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 1,231,885 | 2,130,418 | |
| 13,866,000.00 | **மொத்த மூலதனம் செலவினம் (உ)** | | **10,237,142** | **13,411,232** | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | | **9,040,836** | **12,136,322** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 294,870 | 155,950 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 8,745,966 | 11,980,372 | ஏசீஏ-5 |
| | **மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)** | | 328,404,509 | 306,675,609 | |
| **336,510,000.00** | **2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ-எ)** | | **(12,084)** | **1,476,913** | |

## 3.3 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2020 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 43,061,069 | 39,376,635 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 33,838,399 | 33,255,796 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | 706,903 |
| **மொத்த சொத்துக்கள்** | | **76,899,468** | **73,339,334** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| தேறிய பெறுமதி | | 33,793,001 | 32,655,817 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 43,061,069 | 39,376,635 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | - | 550,000 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்பக் கணக்குகள் | ஏசீஏ-4 | 45,398 | 49,979 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | 706,903 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **76,899,468** | **73,339,334** |

பக்க இலக்கம் 6 முதல் 61 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 62 முதல் 70 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 18.02.2021

Major General (Retd) V.R. Silva
Secretary
State Ministry of Prison Management &
Prisoners' Rehabilitation Affairs
No. 40, Buthgamuwa Road, Rajagiriya.

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 17/02/2021

R.P.S. SAMANKUMARI
COMMISSIONER
DEPARTMENT OF COMMUNITY BASED CORRECTIONS

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி : 2021.02.16

CHANDRAKANTHI GUNAWARDANE
ACCOUNTANT
DEPARTMENT OF COMMUNITY BASED CORRECTIONS

**3.4 2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று ஏசீஏ- சீ**

| | உண்மை | |
|---|---|---|
| | **2020** | **2019** |
| | **ரூபா** | **ரூபா** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | - | - |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 13,766,773 | - |
| ஏனைய செலவின தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | - | - |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 306,840,000 | 296,610,696 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **320,606,773** | **296,610,696** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள் | 304,570,545 | 277,340,622 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 2,749,365 | 2,789,267 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 4,669,153 | 4,253,857 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 1 | 223 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **311,989,064** | **284,383,968** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **8,617,709** | **12,226,728** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை | - | - |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை | -6,322,846 | 10,011,717 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **6,322,846** | **10,011,717** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 8,022,120 | 11,411,855 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 6,795,854 | 10,867,169 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **14,817,973** | **22,279,025** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(8,495,127)** | **(12,267,307)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ)** | **122,582** | **(40,579)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| கிடைக்கப்பெற்ற வைப்புகள் | 172,289 | 196,529 |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **172,289** | **196,529** |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வைப்புகளின் கொடுப்பனவு | 294,870 | 155,950 |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **294,870** | **155,950** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஓ)=(ஏ)-(ஐ)** | **(122,582)** | **40,579** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) -(ஓ)** | **-** | **-** |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **-** | **-** |

3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | |
|---|---|
| 1) | <u>அறிக்கையிடல் காலப்பகுதி</u> |
| | இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2020 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும். |
| 2) | <u>அளவீட்டுக்கான அடிப்படை</u> |
| | நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும். |
| | நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும். |
| 3) | <u>வருமானத்தை அடையாளங்காணுதல்</u> |
| | நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது. |
| 4) | <u>சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு</u> |
| | சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. |
| | கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது. |
| 5) | <u>சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்</u> |
| | இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கிஉ தொடர்புபட்டதாகும். |
| 6) | <u>காசு மற்றும் காசுக்கு சமமானவை</u> |
| | காசு மற்றும் காசுக்கு சமமானவை 2020 டிசம்பர் 31இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும். |

3.6 வருமான அறவீட்டு முன்னேற்றம்

| வருமான குறியீடு | வருமானத் தலைப்பு | வருமான மதிப்பீடு | | வருமான அறவீடு | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | திருத்தப்பட்ட மதிப்பீடு | தொகை | திருத்தப்பட்ட மதிப்பீட்டின்% |
| - | - | - | - | - | - |

3.7 ஒதுக்கீட்டு பயன்பாட்டு செயன்முறை (ரூபா.000)

| ஒதுக்கீட்டு வகை | மொத்த ஒதுக்கீடு | | உண்மையான செலவு | உண்மையான செலவு திருத்தப்பட்ட ஒதுக்கீட்டின் % ஆக |
|---|---|---|---|---|
| | அசல் ஒதுக்கீடு | திருத்தப்பட்ட ஒதுக்கீடு | | |
| ஆரம்ப ஒதுகீடு | 322,644,000 | 322,644,000 | 309,126,531 | 96% |
| மூலதனம் | 13,866,000 | 13,866,000 | 10,237,142 | 74% |

3.8 நி.கூ208ன் படி மற்றொரு அமைச்சின் ∴ திணைக்களத்தின் முகவராக இத் திணைக்களத்திற்கு ஒதுக்கீடு வழுங்கப்பட்டது

| இல. | ஒதுக்கீடு வழங்கப்பட்ட அமைச்சகம் / திணைக்களத்தின் பெயர் | ஒதுக்கீடு | | உண்மையான செலவு | உண்மையான செலவு திருத்தப்பட்ட ஒதுக்கீட்டின் % ஆக |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப ஒதுக்கீடு | திருத்தப்பட்ட ஒதுக்கீடு | | |
| 01 | தேர்தல் ஆணைக்குழு ( 020 ï 1 - 1 ï 4 ï 1409) | 699,153.47 | 669,153.47 | 669,153.47 | 100% |
| 02 | நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ( 104 ï 01 ï 02 ï 00 - 1003 ) | 2,800,000.00 | 2,800,000.00 | 2,800,000.00 | 100% |
| 03 | அரச சேவை,உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சு ( 130 ï 1 ï 14 ï 0 ï 1003) | 1,280,000.00 | 1,280,000.00 | 1,200,000.00 | 94% |

3.9 நிதி அல்லாத சொத்துக்களின் முன்னேற்ற அறிக்கை

| சொத்து குறியீடு | விளக்கம் | கணக்கெடுப்பு வாரியத்தின் படி 2019.12.31ல் உள்ளவாறான மீதி | நிதி நிலை அறிக்கையின் படி 2019.12.31ல் உள்ளவாறான மீதி | செயன்முறையில் உள்ள வேலை | முன்னேற்றம் % ஆக |
|---|---|---|---|---|---|
| 9152 | இயந்திர மற்றும் உபகரணங்கள் | 39,376,634.00 | 39,376,634.51 | - | 100% |

## 3.10 கணக்காய்வாளர நாயத்தி அறிக்கையி

# ජාතික විගණන කාර්යාලය
## தேசிய கணக்காய்வு அலுவலகம்
## NATIONAL AUDIT OFFICE

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. ජේපීඒ/සී/සී,ඊ/සීබීසී/එෆ්ඒ/2020 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2021 මැයි 06 දින |

ගණන් දීමේ නිලධාරී

ප්‍රජා පාදක විශෝධන දෙපාර්තමේන්තුව

**ප්‍රජා පාදක විශෝධන දෙපාර්තමේන්තුවේ 2020 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව.**

---

1. <u>මූල්‍ය ප්‍රකාශන</u>

1.1 <u>තත්ත්වාගණනය මතය</u>

ප්‍රජා පාදක විශෝධන දෙපාර්තමේන්තුවේ 2020 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්වය ප්‍රකාශය, එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය කාර්යසාධන ප්‍රකාශය හා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශවලින් සමන්විත 2020 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ විධිවිධාන සමඟ සංයෝජිතව කියවිය යුතු ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(1) ව්‍යවස්ථාවේ ඇතුළත් විධිවිධාන ප්‍රකාර මාගේ විධානය යටතේ විගණනය කරන ලදී. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව ප්‍රජා පාදක විශෝධන දෙපාර්තමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලබන මෙම මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව මාගේ අදහස් දැක්වීම් හා නිරීක්ෂණයන් මෙම වාර්තාවේ සඳහන් වේ. ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(6) ව්‍යවස්ථාව සමඟ සංයෝජිතව කියවිය යුතු 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 10 වගන්තිය ප්‍රකාරව ඉදිරිපත් කළ යුතු විගණකාධිපති වාර්තාව යථා කාලයේදී පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලැබේ.

මෙම වාර්තාවේ 1.6 ඡේදයේ දක්වා ඇති කරුණුවලින් වන බලපෑම හැර, මූල්‍ය ප්‍රකාශනවලින් 2020 දෙසැම්බර් 31 දිනට ප්‍රජා පාදක විශෝධන දෙපාර්තමේන්තුවේ අවසන් වර්ෂය සඳහා එහි මූල්‍ය කාර්යසාධනය හා මුදල් ප්‍රවාහය පොදුවේ පිළිගත් ගිණුම්කරණ මූලධර්මවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිඹිබු කරන බව මා දරන්නා වූ මතය වේ.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව    இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.    No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34    +94 11 2 88 72 23    ag@auditorgeneral.gov.lk    www.naosl.gov.lk

